**IN THE COURT OF JUDICIAL MAGISTRATE, ERANIEL**

**DEPOSITION OF WITNESS**

(Chapter XXIII Code of Criminal Procedure, 1973/Chapter XXV of BNSS 2023, and Rule 42 and Judicial Form No. 53 of Criminal Rules of practice 2019 )

**C.C.No. 207/2018 P.W. 7/L.W.9**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| **Name** | : | திரு. டாக்டர். சுகவனேஸ் | **Calling** | : | |
| **Father's Name** | : | த/பெ. | **Age** | : | |
| **Village** | : | | | | |
| **Taluk** | : | | | | |

**Solemnly affirmed in accordance with the provisions of Section 4 of Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on the day 16.09.2025.**

**அரசுத்தரப்பு முதல் விசாரணை** :

**குற்றம் சுமத்தப்பட்ட நபர் ஆஜர். குற்றம் சுமத்தப்பட்ட நபர் தரப்பு கற்றறிந்த வழக்கறிஞர் ஆஜர்**

**1.** நான் தற்போது குளச்சல் அரசு மருத்துவமனையில் குழந்தைகள் நல மருத்துவராக பணிபுரிந்து வருகிறேன். கடந்த 28.10.2016 ம் தேதி இரவு 11.45 மணியளவில் அரசு பணியில் இருக்கும் போது பானான்விளை, மணவாளக்குறிச்சி அஞ்சலை சேர்ந்த செல்லையா நாடார் என்பவரது மகன் தங்கமணி, வயது 68 என்பவரை தன் மகன் சதீஷ் என்பவருடன் வந்து தன்னை அடையாளம் தெரிந்த ஒரு நபர் 28.10.2016 அன்று இரவு 10.00 மணியளவில் லெட்சுமிபுரம் கல்லூரி அருகே வைத்து தன்னை கையாலும், காலாலும் தாக்கியதாக கூறினார்.

அவரை பரிசோதித்துப்பார்த்தபோது அவருக்கு கீழ்கண்ட காயங்கள் காணப்பட்டது.

காயம் 1. இடது பக்க முன்பல் இல்லை.

காயம் 2. இடது கை மணிக்கட்டில் வலி இருந்ததாக தெரிவித்தார்.

நான் அவரை உள்நோயாளியாக சிகிட்சைக்கு அனுமதித்தேன். மேற்படி வல்லுநரான மருத்துவர் மேற்படி சிகிட்சை குறித்த முழுமையான ஆவணங்கள் இன்று எடுத்து வராததால் மேற்படி விசாரணை தொடர்ச்சியை வேறு ஒரு தேதிக்கு ஒத்திவைக்க கேட்டுக்கொண்டதின்

அடிப்படையில் மேற்படி முதல் விசாரணை தொடர்ச்சி 30.09.2025 ம் தேதிக்கு ஒத்திவைக்கப்படுகிறது.

சாட்சி சொல்லி என்னால் எடுத்துச் சொல்லப்பட்டு, தட்டச்சரால் தட்டச்சு செய்யப்பட்டு, குற்றம் சுமத்தப்பட்ட நபர்கள் முன்னிலையில் மேற்படி சாட்சிக்கு படித்து காண்பிக்கப்பட்டு அவரால் சரியானதென்று ஏற்கப்பட்டது.

நீதித்துறை நடுவர்,
இரணியல்.